14.11.2022 அ.வ.எண்.8/2017 வா.சா.1

பெயர்.திரு:-அமரன்

சாட்சி ஆஜர், சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

2 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-

நான் தாக்கல் செய்த ஆவண எண்.1 ல் 15.09.1935 ல் ஒப்பந்த பத்திரத்தின் அடிப்படையில்தான் ஊராட்சி மன்றத்தின் கட்டிட அனுமதி பெற்றுள்ளதாக கூறியிருப்பது சரியா என்றால் சரிதான். நான் எனது முதல் விசாரரணையில் மேற்படி 1935 தேதி ஆவணத்தை தாக்கல் செய்துள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் நானோ, எனது தாத்தவோ, எனது அப்பாவோ வேட்டுவ சமுதாயத்தின் பரம்பரை அறங்காவலர் என்று குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளது என்றால் எனது தாத்தா பெயர் எழுதப்பட்டுள்ளது. தற்போது மேற்படி ஆவணத்தை பார்த்து மேற்படி ஆவணத்தின் எனது தாத்தா பெயர் எந்த இடத்தில் உள்ளது என்று குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் மேற்படி ஆவணம் நான் படிக்கும் வகையில் இல்லை. ஆனால் மேற்படி ஆவணத்தில் எனது தாத்தா பெயர் உள்ளது. மேற்படி ஆவணத்தில் எனது தாத்தா பெயர் இல்லாத காரணத்தினால் மேற்படி ஆவணத்தை படிக்க இயலாது என்று நான் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி ஆவணத்தில் என்னென்ன சர்வே எண்கள் இடம் பெற்றுள்ளது என்று நான் இன்று வரை தெரிந்துகொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது வழக்கறிஞர் ஆவணத்தை பார்த்து சர்வே எண்களை சொல்லியுள்ளார். எனது வழக்கறிஞர் மேற்படி ஆவணத்தில் எந்த இடத்தில் எனது தாத்தா பெயர் உள்ளது என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளரா என்றால் சொல்லியுள்ளார். எந்த வரியில் வருகிறது என்று குறிப்பிட்டு எனக்கு தற்போது தெரியாது. நான்தான், மடத்தின் அறங்காவலர் என்று குறிப்பிட்டுள்ள நிலையில் நான் மட்டும்தான் அறங்காவலரா அல்லது வேறு யாரும் உள்ளார்களோ என்னைத்தவிர எனது சமுதாயத்தை சேர்ந்த 4, 5 நபர்கள் அறங்காவலராக உள்ளனார். மேற்படியார்கள் என்னால் குறிப்பிட்டு சொல்ல இயலுமா என்றால் இயலும். நடராஜ், சம்பத், சீனிவாசன், மற்ற இருவர் பெயர் ஞாபகமில்லை. நாங்கள்தான் அறங்காவலர்கள் என்பதற்கு ஆவணங்கள் உள்ளதா என்றால்

இல்லை. நான் சொல்லியுள்ள ஆவணத்தின் உள்ள மடமானது அறநிலைத்துறைக்கு சொந்தமான மடமா, சங்கர மடம், பேரூர் ஆதிண மடம், மதுரை ஆதின மடம் என்பது போல் இந்து சமயம் கொள்கைகளை பரப்பும் மடமா என்றால் மேற்படி மடமானது வேட்டுவ சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட மடமாகும். வழக்கு சொத்து அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து என்று சொல்லியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். அரசு தனியாக மேற்படி இடத்திற்கு பட்டா வழங்கியுள்ளார்களா என்றால் இல்லை. மேற்சொன்னவாறு, பட்டா இல்லாத நிலையில் மேற்படி அரசுக்கு பாத்தியப்பட்ட புறம்போக்கு சொத்தை நாங்கள் வேறு சமுதாய மக்களுக்கு எழுதிக்கொடுக்க எங்களுக்கு அறங்காவலர் என்ற நிலையில் உரிமை உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 1974 ம் வருடம் புல வரைபடத்தின்படி நாங்கள் கட்சிசெய்யும் மடமானது தென்கிழக்கு முலையில் அமைந்துள்ளதா என்றால் ஆமாம். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் 2 வது பக்கத்தில் 12 வது வரியில் பணம் கட்டி நந்தவனம் போன்றவைகளை பராமரிக்கவேண்டும் என்று எழுதப்பட்டுள்ளதா என்றால் சாட்சி மேற்படி ஆவணத்தை படித்துப்பார்த்து, எழுத்துக்கள் சரியாக தெரியவில்லை என்று சாட்சியம் அளிக்கிறார். மேற்படி ஆவணத்தை ஒப்புக்கொண்டால் மேற்படி ஆவணம் எங்களுக்கு எதிராக அமைந்துவிடும் என்பதால், மேற்சொன்னவாறு தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது வழக்கறிஞர் மூலம் மேற்சொன்ன ஆவண சரத்துக்களை தெரிந்துக்கொண்டேனா என்றால் தற்போது ஞாபகம் இல்லை.1924 ம் ஆண்டுக்கு முன்பே மடம் இருக்கும் நிலையில் நாங்கள் 1935 ம் ஆண்டில் மடம் கட்டி நந்தவனம் முதலானவைகள் அமைத்து பராமரித்து வருகிறோம் என்று 1935 ஆவணத்தில் சொல்லியுள்ளது மோசடியானது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆன முற்றிலும் மோசடியான ஆவணம் என்றால் சரியல்ல.

2 முதல் 4 பிரதிவாதிகள் வழக்கறிஞர் தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.